பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 26 புதன்கிழமை 14.12.2022 கதிர் 290

## மேலதிக வகுப்புகள் நள்ளிரவு முதல் தடை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் இன்று நள்ளிரவு முதல் தடை செய்யப்படுகின்றன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கான அனைத்து 8

## மட்டக்குளியில் தீ 4 வீடுகள் சேதம்



கொழும்பு, மட்டக்குளி – ஸ்ரீ விக்ரமபுர பிரதேசத்தில் இன்று அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் 4 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இரண்டு வீடுகள் முழுமையாகவும், ஏனைய இரண்டு வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீடொன்றிலிருந்த மண்ணெண்ணெய் அடுப்பு கவிழ்ந்ததால் தீ பரவியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தீப்பரவலைக் கட்டுப்படுத்தக் கொழும்பு மாநகர 2




# கோட்டாவின் வீழ்ச்சிக்கு பஸில்; மஹிந்தவின் வீழ்ச்சிக்கு நாமல்

## காரணகர்த்தாக்கள் என்கிறார் விமல்

கோட்டாபய ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்கு அவரது சகோதரனான பஸில் ராஜபக்சவே பிரதான காரணம். அதேபோல் மஹிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சிக்கு அவரின் மூத்த மகனான நாமல் ராஜபக்ஷவே பிரதான காரணம். 2

## பேராதனை கலைப்பீட ஆசிரியர் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு




பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்துப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆசிரியர் சங்கத்தினர் இன்று முதல் பணிப் புறக்கணிப்பை முன்னெடுக்கின்றனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இந்தப் பணிப்புறக்கணிப்பு தொடரும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 2

## நாட்டின் நலன் கருதி கூட்டணிக்குத் தயார்

### 'மொட்டு'க்கு ஐ.தே.க. பச்சைக்கொடி



நாட்டின் நலன் கருதியும், நாட்டை மேம்படுத்துவதற்காகவும் 'மொட்டு'க் கட்சி அல்ல எந்தத் தரப்புடனும் கூட்டணி வைக்கத் தயார் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் 8

## பஸிலின் கோரிக்கையை நிராகரித்த ரணில் 2023 ஜனவரியிலேயே அமைச்சரவை மாற்றம்



அமைச்சரவைமாற்றத்தை இந்த வாரம் மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

வரவு – செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பு இம்மாதம் 8ஆம் திகதி நிறைவடைந்துள்ளது. 'மொட்டு'க் கட்சியின் பேராதரவுடன் ரணிலின் வரவு -செலவுத் திட்டம் 2

## ஐக்கிய மக்கள் சக்தியில் பலருக்கு ஜனவரியில் அமைச்சுப் பதவிகள்

### ரணிலிடமிருந்து சப்ரிக்குக் கைமாறும் நிதி

அடுத்த வருடம் ஜனவரியில் இடம்பெறப்போகும் அமைச்சரவை மாற்றத்தில் சஜித் தரப்பான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் பல பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது. 2

## பணம் கொடுத்து அமைச்சராகுவதற்கு ரணிலின் சகா முயற்சி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய சகாவான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ரவி கருணாநாயக்க பணம் கொடுத்து 2

## ரணிலுக்கான ஆதரவை பகிரங்கப்படுத்திய ராஜித

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கான வல்லமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கின்றது – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் 2



### களுபோவில வைத்தியசாலையின்

## 4ஆம் மாடியிலிருந்து கீழே விழுந்து நோயாளர் சாவு!

கொழும்பு, களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்த நோயாளி ஒருவர் நான்காவது மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார் என்று கொஹுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோணபொல, கந்தேவத்தை பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நோயாளர் 8

## ரணில் அரசின் சதி முயற்சிக்கு துணைபோகும் ஆணையாளர்

### அநுரகுமார எம்.பி. விசனம்



தோல்விப் பயத்தில்தான் ரணில்–ராஜபக்ஷ அரசதரப்பினர் தேர்தலுக்குச் செல்வதற்குப் பயப்படுகின்றார்கள். அதனால் தேர்தலை ஒத்திவைக்க அவர்கள் திட்டம் தீட்டுகின்றனர். அரசின் இந்தச் சதித்திட்டத்துக்குத் தேர்தல்கள் ஆணையாளர் துணைபோகின்றார்.

– இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். 2


## பளையில் சிக்கியது கஞ்சாத் தோட்டம்

(ந.லோகதயாளன்)

கஞ்சாத் தோட்டம் ஒன்று பொலிஸ் முற்றுகையின் போது அகப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மக்கேணிப் பகுதியில் உள்ள தனியார் காணியிலேயே 8







## ரணில் அரசின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'எதிர்வரும் ஜனவரி 9 க்கு முன் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அறிவிப்பதற்குத் தயார் என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார். உள்ளூராட்சிசபைத்தேர்தல்நடக்குமா?' என்ற கேள்விக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க பதிலளிக்கும் போது,

தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் கடந்த ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வந்துவிட்டது. அவர்கள் நினைத்தால் இன்றே வேட்புமனுக்களைக் கோர முடியும்.

எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி என்பது இறுதித் திகதி. அவர்கள் ஏன் இறுதித் திகதி வரை காத்திருக்க வேண்டும்? அதுவரை அவர்கள் காத்திருப்பது அரசின் நிலைப்பாட்டை அறிவதற்காக.

தேர்தலுக்குச் செல்வதற்கு அரசுக்கு விருப்பம் இல்லை – என்றார்.

'அரசு தேர்தலுக்கு அஞ்சுவதற்கான காரணம்?' என்ற கேள்விக்கு அநுரகுமார பதிலளிக்கும் போது,

இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தேர்தலை எப்படி எதிர் கொள்வதென்ற பிரச்சினை. ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் சேர்ந்துதான் இந்த அரசை உருவாக்கியுள்ளார்கள்.

இதனால் தேர்தலை இணைந்து சந்திப்பதா? இல்லைபிரிந்துசந்திப்பதா? என்ற குழப்பம் இவர்களுக்கு உண்டு.

இணைந்து சென்றால் மக்கள் அதை விரும்பமாட்டார்கள். பிரிந்து சென்று ஆளை ஆள் எதிர்த்துப் போட்டியிடவும் முடியாது.

அடுத்து தோல்விப் பயம். இந்தத் தேர்தலில் அரசு நிச்சயம் தோல்வியடையும். அப்படி தோல்வியடைந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் அந்தக் கதிரையில் இருக்க முடியாது. நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சென்றே ஆக வேண்டும்.

இதனால்தான் இவர்கள் தேர்தலுக்குச் செல்வதற்குப் பயப்படுகின்றார்கள். அதனால் தேர்தலை ஒத்திவைக்க அவர்கள் திட்டம் தீட்டுகின்றனர்.

அரசின் இந்தச் சதித் திட்டத்துக்குத் தேர்தல்கள் ஆணையாளர் துணை போகின்றார் – என்றார்.

## பேராதனை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை அனைத்துப் பரீட்சைகள் தொடர்பான நடவடிக்கைகள் உட்பட சகல பணிகளையும் தாம் நிறுத்தியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அதுல சேனா ரத்ன மீதான தாக்குதல் தொடர்பில் தேவையான பொலிஸ் முறைப்பாடு களை மேற்கொள்ள பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிவிட்டது. அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய சில மாணவர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் நிர்வாகம் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறிவிட்டது – என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எனவே, மாணவர்கள் சட்டத்தைக் கையில் எடுப்பதைத் தடுப்பதற்கும், பல்கலைக்கழகச் சொத்துக்களைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்ட நிர்வாகங்களின் முன்னுரிமை கடமையாக இருப்பதை உறுதி செய்வதற்கும் தமது பணிநிறுத்தம் முதல் படியாக இருக்கும் என்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட ஆசிரியர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## மட்டக்குளியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் தீயணைப்புப் பிரிவின் 5 வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

இந்த விபத்தில் எவ்வித உயிர்ச்சேதங்களோ, எவருக்கும் காயங்களோ ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்

## கோட்டாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாமல் ராஜபக்ஷ ஒரு புரைலர் கோழி. பிறந்த உடனே நாடாளுமன்றத்துக்கு வந்துவிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ உண்மையான தந்தை என்றால் அவர் நாமல் ராஜபக்ஷவை நல்ல பக்குவம் அடைந்த பின் அரசியலுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும்.

எத்தனையோ பணக்காரர்கள் தங்களது பிள்ளைகளை பஸ்களில் அனுப்பி அடிமட்டத்தில் இருந்து பழக்குகின்றார்கள்.

அப்போதுதான் தந்தையின் மறைவுக்குப் பின் அவரது நிறுவனத்தை அவரது பிள்ளைகள் வெற்றிகரமாகக் கொண்டு செல்வர். அவர்தான் சரியான தந்தை.

அப்படித்தான் அரசியலிலும். அடிமட்டத்தில் இருந்துதான் வர வேண்டும்.

தந்தை ஜனாதிபதி என்ற கெத்தில் நாமல் நாடாளுமன்றதுக்கு வந்தார். மாமா என்று அழைத்தவர்களையெல்லாம் மச்சான் என்று அழைக்கத் தொடங்கினார். இறுதியில் மஹிந்த மண்கவ்வினார் – என்றார்.

## ரணிலுக்கான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எனவே, சர்வகட்சி அரசு அமைத்தேனும் அவருக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் ஊடகங்கள் முன்னிலையில் அவர் கூறினார்.

2002 காலப்பகுதியில் சரிவைச் சந்தித்திருந்த பொருளாதாரத்தைக்கூட ரணில் விக்கிரமசிங்க மீட்டிருந்தார் எனவும் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

## பஸிலின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில், புதிய அமைச்சரவையை இந்த வாரம் நியமிக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில்ராஜபக்சகேட்டுள்ளார்.

ஆனால், அதற்கான தேவை இப்போது எழவில்லை என்றும், ஜனவரியில்தான் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் என்றும் பஸிலிடம் ஜனாதிபதி கூறினார் என்று அறியமுடிகின்றது.

## ஐக்கிய மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அதேவேளை, தற்போது வெளிவிவகார அமைச்சராக இருக்கும் அலி சப்ரிக்கு நிதி அமைச்சு வழங்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசமைப்பின் 21 ஆம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைத் தவிர வேறு எந்த அமைச்சையும் வைத்துக்கொள்ள முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அதன் அடிப்படையில்தான் இப்போது வகித்து வரும் நிதி அமைச்சை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அலி சப்ரிக்கு வழங்கவுள்ளார் என்று அந்த வட்டாரம் மேலும் தெரிவிக்கின்றது.

## பணம் கொடுத்து......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுப் பதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றார் என்று அறிய முடிந்துள்ளது. 'மொட்டு'க் கட்சியைச் சேர்ந்த தேசியப் பட்டியல் எம்பி ஒருவருக்குப் பணம் கொடுத்து அதிலிருந்து விலகவைத்துஅதன்ஊடாகஎம்.பியாவதற்கும் அமைச்சராவதற்கும் முயற்சி செய்கின்றார் என்று தெரியவந்துள்ளது.

இந்தத்தகவலை 'மொட்டு'க்கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவே தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தனது சகாக்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதே இதை அவர் கூறியுள்ளார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இரு வரலாற்று நாயகர்கள்

ஈழத் தமிழர்களை பொறுத்தவரை இன்று இரண்டு வரலாற்று நாயகர்களை நிறைவு கூர வேண்டிய தினம்.

ஒருவர் – தமிழ் உரைநடை தந்த வல்லாளர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். அவரின் குருபூசைத் தினம் இன்று. அத்தோடு வரும் ஞாயிற்றுக்கிழமை அவரின் 200 ஆவது பிறந்த நாளும் வருகின்றது.

அடுத்தவர் – தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியரும் மதியுரைஞுமான 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம். அவரின் 16 ஆவது நினைவு தினம் இன்று.

இருவருமே ஒரு வகையில் இலங்கைத் தமிழ் சுதேசிகளின் எதிர்காலம் குறித்து கனகச்சிதமாக ஊகித்தறிந்த தீர்க்கதரிசிகள்.

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் பல தலைவர்கள் தோன்றி, இனத்தை வழிநடத்தி இருக்கின்றார்கள். நாவலர், சேர் பொன் இராமநாதன், ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, தளபதி அமிர்தலிங்கம், தலைவர் பிரபாகரன், இப்போது சம்பந்தன் என்று நீண்ட பட்டியல் அது. அவர்கள் எல்லோருமே தத்தமது காலத்தில் தமிழ் சுதேசி மக்கள் எதிர் நோக்கிய வரலாற்று பேராபத்துக்களை எதிர்வு கூறினர். அவற்றுக்கு எதிராக செயல்படும் மார்க்கங்களை மொழிந்து நடவடிக்கைகளையும் எடுத்தனர். ஆனால் அந்த நேரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டவராக நாவலர் மட்டுமே அடையாளப்படுத்தப்படுகின்றார்.

அந்நிய மதம் மற்றும் மொழியால் சுதேசி மதத்திற்கும் மொழிக்கும் சமூக கலாச்சாரத்திற்கும் ஏற்படப் போகும் பேராபத்தை எச்சரிக்கையாக முன் வைத்தவர் நாவலர். அந்நிய ஆதிக்கத்தின் ஆக்கிரமிப்பை அதே வழியில் போராடி எதிர்ப்பில் கணிசமான வெற்றியும் கண்டவர். அந்நிய ஆதிக்கத்தின் வழியிலேயே அச்சுஇயந்திரசாலை நிறுவினார். அதே பாணியில் எதிர்ப் பிரசாரம் செய்தார். தம் மொழி, தம் மதத்தை ஆக்கிரமிப்பில் இருந்து காப்பாற்ற முனைந்து, அதில் கணிசமான வெற்றியும் கண்டார். கடும் வறட்சி, பஞ்சம் ஏற்பட்ட போது தீர்வாகக் கஞ்சித் தொட்டியை முன்வைத்து, பசிப்பிணி போக்கினார். பேதி நோய் பரவியபோது அதை எதிர்கொள்ள முதலுதவிகளை வழங்கி காரியமாற்றினார். சுதேசிய மக்களின் பிரச்சினைகளையும் கூறி தீர்வையும் முன் வைத்தார்.

அன்ரன் பாலசிங்கம் ஈழத் தமிழரின் கடந்த ஐந்நூறு ஆண்டுகால அரசியல் சரித்திரத்தில் முகிழ்த்த ஒரே ஒரு சர்வதேச ராஜதந்திரி. அவரைப் பற்றி எழுதுவதானால் அது நீண்ட காதையாகிவிடும்.

தமது மறைவு வரை அவர் கூறியவை அனைத்துமே அவரை ஓர் அரசியல் தீர்க்கதரிசியாகவும் வழிகாட்டியாகவும் நம் முன் நிறுத்துகிறது.

ஈழ விடுதலைப் போராட்டத்தைச் செம்மைப் படுத்த தம்மால் இயன்றவரை உழைத்தவர் பாலசிங்கம். அதில் அவர் வெற்றி பெற முடியவில்லை என்பது காலம் செய்த கோலம். ஈழத் தமிழினத்தின் துரதிஷ்டம்.

# புயல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு செந்தில் தொண்டமான் விஜயம்!



அடாவத்த தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டு, பலத்த காற்றால் பாதிக்கப்பட்ட வீடுகளை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் பார்வையிட்டார்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை எந்தவித நிவாரணங்களும் வழங்கப் படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்குநிவாரணம் வழங்கும் பணிகளை விரைவுபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# டெங்கு நோயாளர் நாட்டில் அதிகரிப்பு!

நாட்டின் சில பகுதிகளில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3 ஆயிரத்து 200 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில், கம்பஹா மாவட்டத்தில் அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு, கொழும்பு, களுத்துறை, கல்முனை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

எனினும், நவம்பர் மாதத்தில் 5 ஆயிரத்து 416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 71 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# 5 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன!

லங்கா சதொசவில் நேற்று (புதன்கிழமை) முதல் அமுலுக்கு வரும் வகையில் 5 அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, ஒரு கிலோ பருப்பு 4 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 385 ரூபாவாகும்.

ஒரு கிலோ கோதுமை மா 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 250 ரூபாவாகும்.

இதேவேளை, ஒரு கிலோ பூண்டு 35 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 460 ரூபாவாகும்.

ஒரு கிலோ வெங்காயம் 9 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 190 ரூபாவாகும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ரின் மீன் 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 490 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.



# இலங்கைக்கான ஓமான் தூதரக மூன்றாவது அதிகாரிக்குப் பிணை!

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கைக்கான ஓமான் தூதரகத்தின் மூன்றாவது அதிகாரியாக பணியாற்றிய ஈ.குானை பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் நேற்று(செவ்வாய்கிழமை) முன்னிலைப்படுத்தப்பட்ட போதே அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. ஓமானுக்கு பெண்களை கடத்திய குற்றச் சாட்டின் பேரில் கடந்த மாதம் 29 ஆம் திகதி அதிகாலை ஓமான் தலைநகர் மஸ்கட் நகரிலி ருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே ஓமானுக்கான இலங்கைத் தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தாயின் சட்ட ரீதியற்ற கணவனால் தாக்கப்பட்ட 6 வயது சிறுவன் பலி!

தாயின் சட்டரீதியற்ற கணவர் எனக் கூறப்படும் நபரால் தாக்கப்பட்ட 6 வயது சிறுவனொருவன் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கம்பஹா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என கம்பஹா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் கம்பஹா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் பஹல்கம பிரதேசத்தில் உள்ள வீட்டுக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் சிறுவனை மீட்டு கம்பஹா வைத்தியசாலையில் சேர்த்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிறுவன் உயிரிழந்துள்ளான் எனவும், சிறுவனின் தாயின் சட்டரீதியற்ற கணவரை சந்தேகத்தின் பேரில் கம்பஹா பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கனமழை, வெள்ளம், மண்சரிவால் கொங்கோவில் 120பேர் வரை பலி





கின்ஷாசா, டிச.14

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் தலைநகர் கின்ஷாசாவில் கனமழையால் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டதில் குறைந்தது 120 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால், முழுபகுதிகளும் வெள்ளத்தில் மூழ்யுள்ளன. வீடுகள் மற்றும் வீதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. அங்குள்ள பிரதான வீதிகள் சில 3 முதல் 4 நாள்களுக்கு மூடப்படலாம் என்று பிரதமர் அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெள்ளம் மற்றும் மிகப்பெரிய நிலச்சரிவு காரணமாக அங்கு இதுவரை 120 பேர் வரை உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. காங்கோவின் அரசாங்க செய்தித் தொடர்பாளர் பேட்ரிக் முயாயாவால் ட்விட்டரில் வெளியிடப்பட்ட படங்கள், ஒரு பெரிய சாலையில் மிகப்பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது.

மேலும், மோசமான ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட விரைவான நகரமயமாக்கல், காலநிலை மாற்றத்தின் காரணமாக அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு நகரம் அதிகளவில் பாதிப்பை சந்தித்து வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்காவில் பனிப்புயலால் விமான சேவைகள் பலவும் ரத்து




வொஷிங்டன், டிச.14

அமெரிக்காவில் கடந்த சில வாரங்களாகவே கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. குறிப்பாக நியூயொர்க் உள்ளிட்ட பல மாகாணங்களில் வரலாறு காணாத அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளதால் அங்கு மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் முடங்கியுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களைக் கடுமையான பனிப்புயல் தாக்கியது. மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றுடன் பனி கொட்டியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பனிப்புயலால் நியூயோர்க், பென்சில்வேனியா, ஒரேகான், நெவாடா, இடாஹோ, வடக்கு டகோட்டா, தெற்கு டகோட்டா, வயோமிங், கொலராடோ மற்றும் நெப்ராஸ்கா ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பனிப்புயல் காரணமாக வீதிகளில் பல அடி உயரத்துக்கு பனித்துகள் குவிந்துள்ளன. குளிர் வாட்டி வருவதால் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கியுள்ளனர். இதனிடையே பனிப்புயல் காரணமாக அமெரிக்கா முழுவதும் நேற்று முன்தினம் 137 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். அதேபோல் பல விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன எனவும், இன்னும் சில விமானங்கள் மோசமான வானிலை காரணமாக வேறு இடங்களுக்கு மாற்றிவிடப்பட்டன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# நியூசிலாந்து இளைஞர்கள் சிகரெட் புகைக்க வாழ்நாள் தடை அமுலில்!

வெல்லிங்டன், டிச.14

2025 ஆம் ஆண்டுக்குள் நியூசிலாந்தை புகைப்பிடிக்காத நாடாக மாற்ற வேண்டும் என்ற இலக்கை அந்த நாட்டு அரசு கொண்டுள்ள நிலையில், அதன் அடிப்படையில் மக்களிடம் புகைபிடிக்கும் பழக்கத்தை குறைக்க பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இந்த நிலையில் நியூசிலாந்தில் இளைஞர்கள் சிகரெட் வாங்குவதற்கு வாழ்நாள்தடை விதிக்கும் புதிய சட்டத்தை அந்த நாட்டு அரசு நேற்று நிறைவேற்றியுள்ளது.

ஜனவரி 1, 2009 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த எவருக்கும் புகையிலை விற்கக் கூடாது என்று அந்த சட்டம் கூறுகிறது. இதன் மூலம் சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கும். அதாவது, நியூசிலாந்தில் அடுத்த 50 ஆண்டுகளுக்கு பிறகு சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது 63 ஆக இருக்கும் என சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால் அதற்கு முன்பாகவே புகைபிடிக்கும் பழக்கம் மறைந்துவிடும் என்று சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர். இந்த புதிய சட்டம் நாட்டில் புகையிலை விற்க அனுமதிக்கப்படும் சில்லறை விற்பனையாளர்களின் எண்ணிக்கையை சுமார் 6,000ல் இருந்து 600 ஆக குறைக்கிறது. மேலும் புகையிலையில் அனுமதிக்கப்பட்ட நிகோடின் அளவை குறைக்கவும் வழிவகை செய்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பிரிட்டனையும் வாட்டுகிறது கடும் குளிர்; ஏரியில் விழுந்த சிறுவர்கள் மூவர் மரணம்



லண்டன், டிச.14

பிரிட்டனில் நிலவும் கடும் குளிரில் வட அயர்லாந்து, ஸ்காட்லாந்து, இங்கிலாந்து ஆகிய பகுதிகளில் பனிப்பொழிவும் பனிமழையும் அதிகரித்துள்ளன. லண்டன் நகரில் தரையடி ரயில்சேவை ஆங்காங்கே நிறுத்தப்படும் அல்லது தாமதமாக இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கதகதப்புக்கு அவசியமான குளிர்கால அவசரப் பயன்பாட்டு நிலக்கரி ஆலைகளை இயக்க திடீர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், ரயில்சேவை நிறுவனங்கள் பயணத்தைத் தவிர்க்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள என.

இந்த நிலையில், மத்திய இங்கிலாந்தின் சோலிஹல் பகுதியில் உள்ள ஏரியில் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் பல சிறுவர்கள் விழுந்துள்ளனர். அவர்களில் நான்கு பேரை அவசர சேவைப் பிரிவினர் மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் அவர்களில் மூன்று பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர்.

ஒரு சிறுவன் ஆபத்தான கட்டத்தில் சிகிச்சை பெற்றுவருகிறான். சிறுவர்கள் விழுந்து இறந்து போன ஏரிக்கருகே அந்த வட்டார மக்கள் அஞ்சலி செலுத்திவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேபாளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்து; 13 பேர் மரணம்; பலருக்குப் படுகாயம்



காத்மாண்டு, டிச.14

நேபாளத்தில் உள்ள கவ்ரேபலன்சோக் மாவட்டத்தில் மதம் சார்ந்த விழாவிற்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த பஸ் ஒன்று, நேற்றையதினம் மாலை விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த பஸ்ஸில் சுமார் 30க்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர் எனறும், இதில் 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் 20 பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து கவ்ரேபலன்சோக் மாவட்ட பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# இந்திய – சீன எல்லைப் பகுதியில் பதற்றத்தை தவிர்க்குமாறு ஐ.நா. செயலாளர் கோரிக்கை!



வொஷிங்டன், டிச.14

இந்தியா – சீனா இடையே கடந்த சில ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கத்தொடங்கியுள்ளது. லடாக் எல்லையில் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜுன் 15 ஆம் திகதி இந்திய – சீன படைகள் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் இந்திய தரப்பில் 20 வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். மோதலில் தங்கள் தரப்பில் 4 வீரர்கள் உயிரிழந்தனர் என சீனா தெரிவித்திருந்தது..

இந்த மோதலுக்குப் பின் இரு நாடுகளும் எல்லையில் படைகளை குவித்து வைத்துள்ளன. லடாக் மோதலுக்கு பின் சற்று தணிந்திருந்த எல்லைப் பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது. அந்த வகையில் அருணாச்சலபிரதேசத்தின் தவாங் செக்டாரில் உள்ள யங்ட்சி பகுதியில் உண்மை கட்டுப்பாட்டு கோடு அருகே கடந்த 9 ஆம்திகதி இந்திய–சீனபடைகள்மோதிக்கொண்டன. இந்த மோதலில் இரு தரப்பிலும் சில வீரர்கள் காயமடைந்தனர். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே எல்லையில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், எல்லையில் பதற்றத்தை தணிக்கும்படி இந்தியா – சீனாவுக்கு ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்ரொஸ் செய்தித்தொடர்பாளர்ஸ்டெப்னிடுஜாரிக்கூறுகையில், இந்தியா – சீன படைகள் மோதல் குறித்து அறிந்தோம். எல்லையில் பதற்றம் மேலும் அதிகரிக்காமல் பதற்றம் தணிய நாங்கள் அழைப்பு விடுக்கிறோம்' என்றுள்ளார்.

# இன்று முதல் திரையுலக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி: அமைச்சராகிய பின் உதயநிதி ஸ்டாலின் தெரிவிப்பு!




சென்னை, டிச.14

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் 35 ஆவது

அமைச்சராக சேப்பாக்கம் திருவல்லிக்கேணி எம்.எல்.ஏ. உதயநிதிஸ்டாலின்பதவியேற்றுக்கொண்டார்.

உதயநிதி ஸ்டாலினுக்கு இளைஞர் நலன் மற்றும்விளையாட்டுமேம்பாட்டுத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. அமைச்சர் மெய்யநாதனிடம் கூடுதலாக இருந்த விளையாட்டுத்துறை புதிதாக அமைச்சராக பதவியேற்றுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சராக பொறுப்பேற்ற உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது, வாழ்த்து கூறிய அனைவருக்கும் நன்றி. இனி திரைப்படங்களில் நடிக்க மாட்டேன். அமைச்சராக பொறுப்பேற்றதால் கமல்ஹாசன் தயாரிக்கும் படத்தில் நடிக்க முடியாத சூழல் உள்ளது. மாமன்னன்தான் நடிகராக எனது கடைசி திரைப்படம். என் மீது விமர்சனங்கள் வந்து கொண்டேதான் இருக்கும். விமர்சனங்களுக்கு எனது செயல்பாடுகள் மூலம் பதில்அளிப்பேன். முடிந்தவரை அமைச்சர் பதவியில் சிறப்பாக செயல்படுவேன். விளையாட்டு வீரர்களுக்கு ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபடுவேன். தமிழ்நாட்டை விளையாட்டுத் தலைநகராக மாற்றுவோம் என தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தோம், அதை நிறைவேற்றும் வகையில் செயல்படுவேன். தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் மினி ஸ்டேடியம் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன். – என்று அவர் கூறினார்.



# நீட் பயிற்சி மையத்தில் படித்த மூன்று மாணவர் தற்கொலை!

ஜெய்ப்பூர், டிச.14

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோட்டா நகரம், மருத்துவ, என்ஜினீயரிங் படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் பிரபல மையமாக உள்ள நிலையில், இங்குள்ள பயிற்சி மையங்களில், நாடு முழுவதிலும் இருந்து வந்துள்ள ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

அவ்வாறு இங்கு 'நீட்' பயிற்சி மையம் ஒன்றில் பயின்றுவந்த பீகார் மாநிலத்தைச் சேர்ந்த அங்குஷ் ஆனந்த் (வயது 18), உஜ்வல் குமார் (17) என்ற இரு மாணவர்கள் தாங்கள் தங்கியிருந்த அறைகளில் நேற்று முன்தினம் காலை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டனர். மற்றொரு சம்பவத்தில், மத்தியபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பிரணவ் வர்மா (17) என்ற மாணவர் தான் தங்கியிருந்த விடுதி அறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இந்நிலையில் தற்கொலைகளுக்கான காரணங்கள் தெரியவராத நிலையில், இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# சென்னையில் தையில் இலக்கிய விழா

சென்னை, டிச.14

இலக்கிய செழுமைமிக்க தமிழ் மொழியின் இலக்கிய மரபுகளை கொண்டாடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் 4 இலக்கிய திருவிழாக்கள் நடத்தப்படும் என்று தமிழகஅரசால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதன்படி, பொது நூலக இயக்ககம் சார்பில் வைகை, காவேரி, பொருநை, சிறுவாணி ஆகிய நதி நாகரிக மரபு அடிப்படையில் 4 இலக்கிய திருவிழாக்கள் நடத்தப்படுகிறது. அதேபோல், சென்னையிலும் இலக்கிய திருவிழா நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதில் பொருநை இலக்கிய திருவிழாவானது கடந்த மாதம் 26, 27 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளின் பண்பாட்டின் கூடாரமாக இருக்கும் சென்னையில் இலக்கியத் திருவிழா அடுத்த ஆண்டு (2023) ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை 3 நாள்கள் சென்னை கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் நடத்தப்பட இருக்கிறது.

இந்த விழாவில் இலக்கிய படைப்புகள், பண்பாட்டின் உச்சங்கள் என இலக்கிய வாசகர்களுக்கான அரங்கமும், கல்லூரி மாணவர்களை இலக்கியம் நோக்கி வழிநடத்திச் செல்லும்வகையில்சிறந்தஆளுமைகளின்உரையாடலுடன் கூடியமாணவர்களுக்கானதனிஅரங்கமும், சிறுவர்களுக்கு கதை, பாடல், நாடகம் வழியாக நமது இலக்கிய உலகை திறந்துகாட்டும் வகையில் சிறுவர் இலக்கிய அரங்கமும், திரை மொழியாக உலக, இந்திய சினிமாக்கள் கொண்ட காட்சி அரங்கமும் அமைய இருக்கிறது. அரசு பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளான பொம்மலாட்டம், நாடகம் மற்றும்

மரபுசார் விளை யாட்டுகளும் இடம் பெறும்.

இந்த 3 நாள்களும் மக்கள் அனைவரும் விழாவை கண்டு களிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளதுடன், சென்னை இலக்கிய திருவிழாவினை கொண்டாடும் விதமாக அண்ணா நூற்றாண்டு நூலகம் அந்த நேரத்தில் வண்ண விளக்குகளாலும், கலை வேலைப்பாடுகளாலும், ஓவியங்களாலும் நிறைந்திருக்கும். இதுதவிர நூலக வளாகத்தில் அரிய பருவ இதழ்கள், நூல்கள், ஆவணங்கள், தமிழகத்தை ஆண்டமூவேந்தர்கள் காலம் முதல் வெளிவந்த அரிய நாணயங்கள், சென்னையின் வரலாறு சார்ந்த படங்களும் காட்சிப்படுத்தப்பட இருக்கின்றன. இந்த இலக்கிய திருவிழாவுக்கான இலச்சினையை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நேற்று வெளியிட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.



# கோணேஸர் ஆலயத்தைப் புனித பிரதேசமாக்குக! மூதூர் பிரதேச சபையிலும் ஏகமனதான தீர்மானம்

(எவ்.முபாரக்)

திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரியும், ஆலய வளாகத்தினுள் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றக் கோரியும் மூதூர் பிரதேச சபையில் நேற்றுத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.



மூதூர் பிரதேச சபையின் அமர்வு நேற்றுக் காலை இடம் பெற்றபோது உப தவிசாளர் சி.துரைநாயகம் இது தொடர்பில் தனிநபர் பிரேரணையை முன் வைத்து உரையாற்றினார். அவர் அப்போது மேலும் கூறியவை வருமாறு:–

பல ஆயிரம் ஆண்டுகள் பழமையான வரலாற்றையும், இந்து சமயத்தின் அடையாளச் சின்னங்களையும் கொண்டுள்ள திருக்கோணேஸ்வர ஆலயமும், அதனைச் சூழவுள்ள இயற்கை வளங்களும் இலங்கையின் மிகப்பெரிய பொக்கிங்களாகும். இவற்றை அதன் பாரம்பரியத்தோடும், எழிலோடும் இயல்பாகவே பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் அளவீட்டுக்கு அமைய திருக்கோணேஸ்வர ஆலயத்தைச் சூழ 18 ஏக்கர் 1 ரூட் 29 பேச்சர்ஸ் காணியும், பாபநாச தீர்த்தக் கிணற்றைச் சூழ 3 ஏக்கர் 2 ரூட் 1 பேர்ச் காணியும், கோட்டை வாசலின் முன்னால் உள்ள எல்லைப் பிள்ளையார் கோவிலைச் சூழ 26 பேர்ச்சஸ் காணியுமாக திருக் கோணேஸ்வர ஆலயத்திற்குரிய காணிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், திருக்கோணேஸ்வர ஆலய வளாகம் இந்துக்களின் தொல் பொருள்கள் நிறைந்த இடமாக இருப்பதனால் தொல்லியல் திணைக்களத்தினால் தொல்லியலுக்குரிய இடமாக இந்த ஆலய வளாகம் அடையாளப்படுத் தப்பட்டுள்ளது.

எனினும், திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தினுள் சட்டத்துக்கு முரணாக, அத்துமீறிய கடைகளும், கட்டுமானங்களும், மனித நடமாட்டங்களும் ஆலயத்தின் புனிதத்தை பாதிக்கும் விதமாகவும், ஆலய வளாகத்தைச் சூழவுள்ள இயற்கை வளங்களுக்கும், வன விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவனவாகவும் இன்றுவரை இருந்து வருகின்றன. இதே நிலைமை தொடருமானால் ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாது திருக்கோணேஸ்வரத்திற்கு உரித்தான இயற்கை வளங்களையும், வனவிலங்குகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். திருக்கோணமலையின் இயற்கை வளமும், திருக்கோணேஸ்வரர் ஆலயமும் உலகத்தில் உள்ள சுற்றுலாப் பயணிகளை கவருகின்றவையாக இருக்கின்றன.

இவற்றின் ஊடாகவும் பெருமளவான அந்நியச் செலாவணியை எமது நாடு ஈட்டி வருகின்றது. இதனால் இந்துசமய விழுமியங்களை பாதிக்காத வகையில் ஆலயத்தின்பால் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் விதமாகவும், பாரம்பரிய அம்சங்களை பாதுகாக்கும் விதமாகவும் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகளைச் செய்கின்ற ஆலய நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு தொல்லியல் திணைக்களம் அனுமதி வழங்கி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவதோடு ஆலய வளாகத்தில் அத்துமீறி, சட்டத்துக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டுள்ள கடைகள், கட்டடங்கள் என்பவற்றை உடனடியாக அகற்றி ஆலயத்தின் எல்லைக்கு அப்பால் சட்ட ரீதியாகவும், நியாயமான முறையிலும் அவற்றுக்கான பதில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் இச் சபையின் ஊடாக தொல்லியல் திணைக்களம் உட்பட அதனுடன்தொடர்புடைய ஏனைய திணைக்களங்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியது.

# ஆறுமுக நாவலரின் குருபூஜை அம்பாறையில் மகா யாகத்துடன்





(வி.ரி. சகாதேவராஜா)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது 200 ஆவது அகவை நிறைவினை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிழக்கிலங்கை இந்துக் குருமார்களினால் நடத்தப்படும் மகா யாகம் நிகழ்வு இன்று புதன்கிழமை அதிகாலை 5 .00மணி முதல் காலை 7 மணி வரை பெரிய நீலாவணை ஸ்ரீ மஹா விஷ்ணு வேதஸ்தானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

மேலும் இந்து குருமார்கள், ஆலய தர்ம கர்த்தாக்கள், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை மாவட்ட இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி மேற் கொண்டிருந்தார். இந்நிகழ்வானது ஆலயதரிசனம் என்னும் நிகழ்வினுடாக இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தமிழ் சேவை தென்றல் அலைவரிசையில் நேரடியாக 6.30 மணிக்கு ஒலிபரப்பு செய்யப்பட்டது.

# இறக்காமம் பிரதேச சபையில் வரவு – செலவுத் திட்டம் தோல்வி

## மு.காவினர் பிரிந்து வாக்களிப்பு

(அபு அலா)

முஸ்லிம் காங்கிரஸின் ஆளுகைக்குட்பட்டிருந்த இறக்காமம் பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் தோல்வியடைந்துள்ளது.

இறக்காமம் பிரதேச சபையின் அமர்வு நேற்று தவிசாளர் ஜெமில் காரியப்பர் தலைமையில் இடம்பெற்றபோது 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது, வரவு – செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 6 உறுப்பினர்களும், எதிராக 7 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

வரவு –செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உபதவிசாளர் நௌபர் மௌலவி, அன்வர், பாஹிமா, பொதுஜன பெரமுன கட்சியின் சிறியலதா மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தவிசாளர் ஜெமில் காரியப்பர், நிர்மலா ஆகியோர் வாக்களித்தனர்.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் தவிசாளர் கலிலுர் றஹ்மான், றபாய்டீன், சுலைஹா, சுல்பிகார் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆஸிக், நைஸர், முஸ்மி ஆகியோர் வாக்களித்தனர்.

இதன் மூலம் இறக்காமம் பிரதேச சபையின் 2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் ஒரு மேலதிக வாக்கினால் தோல்வியடைந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் கூட்டில் உள்ள இறக்காமம் பிரதேச சபையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 3 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தமையே வரவு – செலவுத்திட்டம் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணமாகும். இறக்காமம் பிரதேச சபையில் மொத்தமாக 13 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தொப்பிக்கல பிரதேசத்தில் கஞ்சா தோட்டம் சிக்கியது

## பண்ணையில் வளர்த்தவர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள தொப்பிக்கல பூலக்காட்டு பிரதேசத்தில் கஞ்சா தோட்டம் ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்ட பொலிஸார் 21 கஞ்சா செடியுடன் 60 வயதுடைய ஒருவரைக் கைது செய்துள்ளனர் என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய் வாழைச்சேனை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸாருடன் இராணுவ புலனாய்வு பிரிவினர் இணைந்து நேற்று மாலை 5 மணியளவில் புலக்காட்டிலுள்ள பண்ணை ஒன்றை முற்றுகையிட்டனர். இதன் போது அங்கு கஞ்சா செடி பயிரிட்டு வளர்த்து வந்த 60 வயதுடைய ஒருவரை கைது செய்தமையுடப் சுமார் 4 அடி கொண்ட 21 கஞ்சா செடிகளையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவரை இன்று வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறப்புற இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட வர்ண இரவுகள் விருது வழங்கும் நிகழ்வு!

முல்லைத்தீவு மாவட்டத்தின் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த வீர வீராங்கனைகளை கௌரவப்படுத்து வதற்கான வர்ண இரவு நிகழ்வு திங்கட்கிழமை முல்லைத் தீவு மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் சிறப்புற இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(நிர்வாகம்) க.கனகேஸ்வரன் தலைமையில், முல்லைத்தீவு மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் கலந்து சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை பரீட்சை திணைக்கள பரீட்சை ஆணையாளர் ஆ.ஜீவரானி புனிதா மற்றும் முன்னாள் முல்லை மாவட்ட விளையாட்டு வீரரும், தற்போதய யாழ். போதனா வைத்தியசாலையின் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி கதிர்வேல் இளஞ்செழியபல்லவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கௌரவ விருந்தினர்களாக முல்லை மாவட்டத்தின் முன்னாள் சிறந்த உதைபந்தாட்ட வீரரும் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்றுநரான எஸ்.ஐ ஆசைநாதர் மற்றும் கராத்தே குத்துச் சண்டையில் தேசிய பதக்கம் பெற்ற வீரரும், முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய குத்துச் சண்டை கராத்தே பயிற்றுநரும், பல தேசிய மட்ட வீரர்களை உருவாக்கி வருபவருமான கா.நாகேந்திரம்(வள்ளுவன் மாஸ்ரர்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது முல்லைத்தீவு நகரின் சுற்றுவட்ட வீதியிலிருந்து அதிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பாண்ட்வாத்திய இசைக்கருவிகளுடன் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை, வரவேற்பு நடனம் ஆகிய நிகழ்வுகளைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் கலைநிகழ்வுகள், அதிதிகளின் உரைகள், அதிதிகளுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கல், வீரர்களின் விளையாட்டு அறிமுகம் முதலான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேலும் இந்த விருது வழங்கும் நிகழ்வில் மூத்த மற்றும் மறைந்த விளையாட்டு வீரர்களுக்கான மதிப்பளிப்பு, விளையாட்டுத்துறையில் பிரகாசித்த பாடசாலைகளின் அதிபர்களுக்கான கௌரவிப்பு மற்றும் விளையாட்டுத் துறையில் தேசிய, மாகாண போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வீர வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு, பயிற்றுநர்களுக்கான கௌரவிப்பு, பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கான கௌரவிப்பு, திறந்த போட்டியில் தேசிய மட்ட போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான கௌரவிப்பு, இடமாற்றலாகிச் சென்ற விளையாட்டு பிரிவு உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு உள்ளிட்ட மொத்தமாக 297 விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பித்தக்கது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர், முல்லை உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக கிளைத் தலைவர்கள், விழாவிற்கான நிதி அனுசரணையாளர்கள், உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீர வீரங்கனைகள், பாடசாலை மாணவர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்



## காரைநகர் பிரதேச சபையினர் வர்த்தகர்களுடன் விசேட சந்திப்பு!

காரைநகர் பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள வர்த்தக நிலைய வர்த்தகர்களுடனான விசேட சந்திப்பு நேற்று(செவ்வாய்க்கிழமை) காரைநகர் பிரதேச சபையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் 2023 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதி மற்றும் உணவுப் பாதுகாப்பு சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டதோடு வியாபார நிலையங்களில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது,

காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் கணேசபிள்ளை பாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் காரைநகர் பிரதேச பொது சுகாதார பரிசோதகர், மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர், பிரதேச சபையின் செயலாளர் வர்த்தகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மின்சாரக் கட்டணப் பாக்கியை செலுத்தாத அமைச்சர்களுக்கு 2 வார கால அவகாசம்!

தற்போதைய அமைச்சர்களுக்கு மின் கட்டணத்தை செலுத்துவதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரி வித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, பல அமைச்சர்களால் அதிகளவான மின்சாரக் கட்டணங்கள் தீர்க்கப்படாமல் இருப்பதை கருத்தில் கொண்டு புதிய செயல்முறையொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

அமைச்சர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அவர்களது உத்தியோகபூர்வ இல்லங்களை காலி செய்ய மூன்று மாத கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும், அந்தக் காலத்தின் போது அத்தகைய வீடுகளுக்கான கட்டணங்கள் செலுத்தப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

இந்த முரண்பாடு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதுடன், செலுத்தப்படாத தொகை லட்சக்கணக்கான ரூபாவாக அதிகரித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

உத்தியோகபூர்வ இல்லங்களின் செலுத்தப்படாத கட்டணங்கள் மீதும் மேலதிகமாக வட்டி சேர்க்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.

# யாழ்ப்பாண கிங்டம் லயன்ஸ் கழகத்தினால் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு உதவி!




தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பாரிய மருந்துத் தட்டுப்பாடுகளை எதிர்கொள்வதாக கலாநிதி ஆறு.திருமுருகன் ஊடகங்கள்வாயிலாகஅனைவரையும் தங்களாலான உதவிகளை வழங்குமாறு கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சமூக மட்ட அமைப்புக்கள் மற்றும் ஆன்மீக நிறுவனங்கள் பல்வேறு மருத்துவ உதவித்திட்டங்களை வழங்கிவருகின்றன.

இந்தவகையிலே யாழ்ப்பாண கிங்டம் லயன்ஸ் கழகம் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒரு லட்சம் ரூபாவுக்கு மிகவும் அவசரமான மருந்துகளையும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான புற்றுநோயாளர்களுக்குத் தேவையான ஊசிகள் போன்றவற்றையும் வழங்கியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்துக்கு உட்பட்ட வைத்தியசாலைகளில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மிகவும் உயர்தர வைத்தியசாலையாகும். புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநல சிகிச்சைப் பிரிவு என மாகாணத்தின் எந்த வைத்தியசாலைகளிலும் இல்லாத அதிசிறப்புப் பிரிவுகள் இரண்டை இந்த வைத்தியசாலை தன்னகத்தே கொண்டுள்ளது. வடக்கு மாகாணம் தவிர்ந்த கிழக்கு மாகாணம், அநுராதபுரம், புத்தளம் போன்ற பகுதிகளிலிருந்தும் புற்றுநோயாளர்கள் சிகிச்சைக்காக தெல்லிப்ப ழை ஆதார வைத்தியசாலைக்கு வருகின்றனர்.

புற்றுநோயாளர்களுக்கான மருந்துகள் அதிக விலை கொண்டவை. இவை வைத்தியசாலையில் இல்லாத பட்சத்தில் சாதாரண மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த நோயாளர்களால் அவற்றை தனியார் மருந்தகங்களில் அதிக பணம் கொடுத்து பெறுவது கடினம்.

இந்த நிலையில் சேவை நிறுவனங்களான லயன்ஸ் கழகம், றோட்டறிக் கழகம் போன்றவை இவ்வாறான மருத்துவ உதவிகளை தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலைக்கு தொடர்ந் தும் வழங்கி வருகின்றமை நோயாளர்களுக்குக் கிடைத்த மிகப்பெரும் வரப்பிரசாத மாகும்.

## மேலதிக வகுப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, மேற்படி தடையானது பரீட்சை முடியும் வரை அமுலில் இருக்கும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## நாட்டின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கட்சியுடன் கூட்டணி அமைக்கத் தயார் என்று ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. அறிவிப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், இது சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவிடம் வினவப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் எந்தத் தரப்புடனும் கூட்டணி அமைக்க ஐக்கிய தேசியக் கட்சி தயார் என்ற விடயத்தை வெளிப்படுத்தினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## பளையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கஞ்சா செடி பயிரிப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கஞ்சா செடி பயிரிடப்பட்ட காணியைப் பொலிஸார் முற்றுகையிட்ட வேளை காணி உரிமையாளர் தப்பியோடிவிட்டார்.

பயிரிடப்பட்டு 5 மாதங்கள் நிரம்பிய தான பயிரே இவ்வாறு பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## 4ஆம் மாடி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொண்டை புற்றுநோய் காரணமாக களுபோவில போதனா வைத்தியசாலையில் மூன்று மாதங்களாகத் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

நான்காவது மாடியில் சிகிச்சை பெற்று வந்த இந்த நோயாளி இன்று அதிகாலை 5.30 மணியளவில், சிகிச்சை அறையில் உள்நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்துக்கு உணவு உண்பதற்காகச் சென்று, அங்குள்ள ஜன்னலில் இருந்து கீழே குதித்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் கொஹுவலை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2022 இல் வெளியிடப்பெற்றது.